[2024 ஜூன் 27

108—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

***54741—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கட்டடம் கட்டுகின்ற பணிகளுக்கென்று, பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்கான 7,500 கோடி ரூபாய் மொத்த ஒதுக்கீட்டில் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஆயிரம் கோடி ரூபாயோடு சேர்த்து, இதுவரையில் ரூ.3,497 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதுவரை திறக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரம்; வகுப்பறைகள்–3,601, ஆய்வகங்கள்–21, கழிவறைகள்–184 units, சுற்றுச் சுவர்–700 மீ. கட்டப்பட்டு வருபவை–வகுப்பறைகள்–3,401, ஆய்வகங்கள்–105, கழிவறைகள்–191 units, சுற்றுச் சுவர் 2,190 மீ., விடுதிகள்–10. இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் விவரம்; வகுப்பறைகள்–4,356, ஆய்வகங்கள்–280, கழிவறைகள்–133, சுற்றுச் சுவர் 1,100 மீ. ஆக, அந்தவகையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,756 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். அதில் மொத்தம் 72 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இந்தப் பள்ளிக்கு மொத்தம் 8 வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைகள் தேவைப்படுகின்றன. இந்தப் பள்ளியில் கல்வி பயில்கின்ற மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில், நபார்டு திட்டத்தின்கீழ்

2024 ஜூன் 27]

கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் இயங்கிவரும் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர ஆவன செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 820 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியானது, இந்தக் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் விருது பெற்ற பள்ளியாகும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் இப்பள்ளியில், மாணவிகளின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட பள்ளிக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களின் வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. மாணவிகளின் நலன் கருதி, கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்த ஆண்டில் பள்ளிக் கல்வித் துறையில் ஏறத்தாழ 1,728 High School and Higher Secondary Schools–ல் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 100–க்கு 100 சதவிகிதம் இருக்கிறது. ஆக, அந்தவகையிலே இன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்ற கூடுதல் வகுப்பறைகள் இந்த ஆண்டிலே கட்டித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2024 ஜூன் 27

முற்பகல் 10-00

அதுமட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்கள் சில பள்ளிகளில் benches and desks கேட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வை. முத்துராஜா அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடத்திற்கு நான் ஆய்வுக்குச் சென்றபோது, அங்கே ஒரு வகுப்பறையில் கீழே அமர்ந்திருந்த பிள்ளைகளைப் பார்த்து, உடனடியாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினரிடம் எடுத்துச்சொன்னேன். சொல்லியபின் குறுகிய காலத்திற்குள் அந்த வகுப்பறைக்குத் தேவையான benches, desks எல்லாவற்றையுமே, உடனடியாக அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கியிருக்கிறார். அதற்கு அவருக்கும், இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கேட்கின்ற கோரிக்கையின்படி, மிக விரைவில், இந்த ஆண்டே, கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரத்தில் இயங்கிவரும் அரசு உயர் துவக்கப் பள்ளியில் 650-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருமாறும், கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட பல்லவராயன்பத்தை, வளங்கொண்டான் விடுதி மற்றும் புதுக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வாராப்பூர் நகராட்சிப் பகுதிக்குட்பட்ட காமராஜபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் கறம்பக்குடி ஒன்றியம், கரு. தெற்குத் தெரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 27]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளிகளைத் தரம் உயர்த்துவது பற்றி நான் நிறைய பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைகளையெல்லாம் இன்றைக்கு நாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவற்றில் எவையெல்லாம் விதிக்குட்பட்டு வருகிறதோ, அதையெல்லாம் கண்டிப்பாக எங்களுடைய அலுவலர்களோடு உட்கார்ந்து பேசி, அதற்கான கருத்துருவைப் பெற்று, எதையெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்கின்ற பணிகளில் எங்களை நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம். அதேபோன்று, அவர் கேட்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் படிப்படியாக இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு எல்லாவிதத்திலும் நாங்கள் வழிவகை செய்வோம். அவர் கேட்டிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு ஆங்காங்கே தற்காலிக ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம் என்று சொன்னாலும், ஏற்கெனவே* BT teachers-*ஆசிரியர்கள் 2,222 பேர் தேர்வை முடித்துவிட்டு,* certificate verification *கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள் அதுவும் நிறைவு செய்யப்பட்டு, எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ, அவை நிரப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *அம்பேத்குமார், மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

பால் குளிரூட்டும் நிலையம்

***58817—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?